moliyagam.org
கற்கவும் காக்கவும்

# <u>கலிவிருத்தம்</u>

கலித்தளை விரவி வருவது துள்ளலோசை. துள்ளலோசை இன்றி அளவடி 4 வருவது கலிவிருத்தம். பெரும்பான்மை இயற்சீர் வரும்.

கலிவிருத்தங்களின் வகையறிய:

பெரியபுராணம்

கம்பராமாயணம்

தேவாரங்கள்

moliyagam.org
கற்கவும் காக்கவும்

புளிமா கூவிளம் கூவிளம் கூவிளம்

புளிமா கூவிளம் கூவிளம் கூவிளம்

புளிமா கூவிளம் கூவிளம் கூவிளம்

புளிமா கூவிளம் கூவிளம் கூவிளம்

உலகம் யாவையும் தாம்உளவாக்கலும்.
நிலைபெ றுத்தலும். நீக்கலும். நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே.

(கம்பராமாயணம் காப்புச்செய்யுள்)

மரவம் பாதிரி புன்னை மனங்கமழ்
குரவம் கோங்கம் மலர்ந்தன கொம்பர்மேல்
அரவ வண்டினம் ஆர்த்துடன் யாழ் செய்யும்,
திருவ மாற்கிளை யாள்திரு முன்றிலே

(சிலப்பதிகாரம்)

moliyagam.org
கற்கவும் காக்கவும்

காய்ச்சீர் காய்ச்சீர் மாச்சீர் தேமா

விரையாலும் மலராலும் விழுமை குன்றா
உரையாலும் எதிர்கொள்ள ஊரா ரம்மாக்
கரையார்பொன் புனல்வேலிக் கள்ளின் மேயான்
அரையார்வெண் கோவணத்த அண்ணல் தானே
(திருஞான சம்பந்தர்)

விளச்சீர் விளச்சீர் மாச்சீர் விளச்சீர்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருத்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே
(திருநாவுக்கரசர்)

கருவிளங்காய் காய்ச்சீர் கருவிளங்காய் காய்ச்சீர்

நகுமலரன நறவம் அவைசொரிவன நறவம்
தொகுமலரன துருக்கம் அவைசொரிவன துருக்கம்
அகமலரன அசோகம் அவைதருவ அசோகம்
பகுமலரன பாங்கர் பலமலையன பாங்கர்
(சூளாமணி)

**<u>கலித்தாழிசை</u>**

குறளடி முதல் கழி நெடிலடி வரை அளவொத்த இரண்டடிகள் வருவன கலித்தாழிசை எனப்படும். வண்ண ஓசையுடன் அமையும். பரணி இலக்கியம் கலித்தாழிசையால் அமைவது.

புயல்வாழ நெடிதூழி புவிவாழ முதல்ஈறு புகல்வேதநூல்

இயல்வாழ உமை வாழ்வ தொருபாகர் இருதாளின் இசை பாடுவாம்

(தக்கயாகப் பரணி – ஒட்டக்கூத்தர்)

பொருபுலி புலியொடு சிலைத்தபோல் பொருபட ரொடுபடர் சிலைக்கவே

அரியினொ டரியினம் அடர்ப்பபோல் அரசரும் அரசரும் அடர்க்கவே

புடைபட இளமுலை வளர்தொறும் பொறையறி வுடையரும் நிலைதளர்ந்

திடைபடு வதுபட அருளுவீர் இடுகத வுயர்கடை திறமினோ

(கலிங்கத்துப் பரணி – சயங்கொண்டார்)